
ஆண்டாளின்



ஸ்ரீ லக்ஷ்மி கடாக்ஷம்
ஸ்ரீ பெருந்தேவித்தாயார், காஞ்சிபுரம்.

திருப்பாவை

ஸ்ரீ ஆண்டாள் திருவுள்ளம்

நன்றி : ***ஸ்ரீ ஹயக்ரீவ ப்ரியா,*** பிப்ரவரி 2002

ஆண்டாளின் திருப்பாவை

நன்றி : ***ஸ்ரீ தேசிக ஸேவா,*** டிசம்பர் 2003

இலவச வெளியீடு

ஸ்ரீ ஆண்டாள் திருவுள்ளம்

ஸ்ரீ.உ.வே.வீராபுரம் சம்பத் தீஷிதர், காஞ்சிபுரம்.

"வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதைத் தமிழ்" என்பது அனைவரும் அறிந்த ஒன்று. வேதசாரமான இத்திருப்பாவையின் விரிவுரைகள் பலபல இடங்களில் நடப்பதும் நாம் அறிந்ததே. இத்திருப்பாவைக்குப் பல உரைகள் மூவாயிரப்படி, ஆறாயிரப்படி இவைகள் ஸ்வாபதேசத்துடன் வந்திருப்பதும் நாம் அறிவோம். இத்தகைய பெருமை பொருந்திய கோதைத் தமிழ் - ஐயைந்தும் ஐந்தும் தந்த நாச்சியாராம் ஆண்டாள் திருவுள்ளத்தை நாம் சிந்திக்க வேண்டும் என்று சிந்தித்ததன் விளைவுதான் இச்சிறிய கட்டுரை.

ஒரு அருளிச் செயல் ஆன்மீகத்திற்கு எவ்வளவு துணை நிற்கிறதோ அதே அளவு சமுதாயச் சிந்தனைக்கும் துணை நிற்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆண்டாள் திருப்பாவையில் நாம் காணும் சில சமுதாயச் சிந்தனைகள்.

ஒரு கிராமமோ, பாடியோ, ஊரோ, பதியோ சிறப்புடன் விளங்க அங்கு செல்வம் கொழிக்க வேண்டும். வறுமையின் நிழலே படாத அளவிற்கு செல்வத்தின் ஆட்சி அமைந்து விட்டால் அங்கு வாழும் பெண்களின் இளமைக்கோ அழகிற்கோ குறைவேது. ஆண்டாள் திருப்பாவையில் காட்டும் ஆயர்பாடிப் பெண்கள் செல்வச்சிறுமியர்கள். அவர்களுக்கு பொருள் செல்வமும், இறையருள் செல்வமும் ஒருங்கு அமையப் பெற்றது அவர்கள் பேறு. எனவே அவர்கள் நேரிழை கொண்டவர்களாய், நிறைவளை கொண்டவர்களாய், வாசநறுங்குழல் ஆச்சியராய், திங்கள் திருமுகத்தினராய் விளங்கினார்கள்.

அழகு, இளமை, மனவலிமை, உடல்வலிமை, அறிவு, இறை உணர்வு இவை ஒருங்கு அமையப்பெற்ற அழகிகள், உலக நன்மைக்காக நோன்பு இருக்கின்றார்கள். அவர்கள் நோன்பின்

நாயகன் கண்ணன். அக்கண்ணனை இவர்கள் வேதவிழுப்பொருளாகவே காண்கிறார்கள். அவன் நாராயணனே என்று அறுதியிடுகிறார்கள். இவர்கள் பறை என்ற பெயரில் எதை வேண்டுகிறார்களோ அதையருளக் கூடிய கண்ணன் நாராயணனே என்று அறுதியிடும் முதல் பாசுரத்தின் அடிகளை நினைவு கூறுவோம்.

...நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்

பறை தரக்கூடியவன் நாராயணனே, என்று அறுதியிடக் காரணம் கண்ணன்தான் எல்லாம் என்று அவர்கள் கொண்ட மன உறுதியின் பாங்கு. உண்மைதானே அவர்களைப் பொறுத்த வரையில் கண்ணன் யசோதை பாலன் அல்ல; இதோ இச்சிலவரிகளைக் கூர்ந்து அறியுங்கள். கோபிகா கீதத்தில்

நகலு கோபிகா நந்தனோ பவான்
அகில தேஹிநாம் அந்தராத்ம த்ருக்

என்றதன் மூலம் அவர்கள் "கிருஷ்ணா நீ கூர்வேல் கொடுந் தொழிலன் நந்த கோபாலன் மகனா? ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ் சிங்கமா? இல்லை இல்லை. நீலமேக சியாமள வண்ணனான நீ, தாமரைக் கண்ணனான நீ, சூரியனையும், சந்திரனையும் ஒத்த முகவொளியை உடைய நீ அனைவர் உடலுறை உயர் ஆன்மா வாய், அனைவரின் அகச் செயலையும் புறச் செயலையும் அறியும் ஒரே சாட்சியாய் இருக்கும் நாராயணனே." "ஸர்வ பூதஸ்தம் ஏகம் நாராயணம்" என்ற உபநிடத சொற்றொடர்களின் பொருளல்லவா அவர்கள் காணும் கண்ணன். அந்த நாராயணன் ஏற்றமெலாம் நினைவு கூற வைக்கிறாள் அக்கோதை. அவைகளைச் சிந்திப்போம்.

1. எல்லாக் காரியங்களுக்கும், காரியப் பொருள்களுக்கும் காரணமாய் இருப்பவன் நாராயணன். இதை ஸ்வாமி தேசிகனின் 'நாரணன் நீயே, காரணன் ஆதலின்' என்ற சொற்றொடர் சான்று கூறும்.

2. ஸத்யத்வம் (உண்மை நிலை) ஞானத்வம் (பேரறிவு நிலை) இவைகளின் ஸ்வரூபத்தைக் காட்டுகின்ற அறங்களின் வடிவாய்த் தோற்றுபவன் நாராயணன்.

3. ஞானம், பலம், ஐஸ்வர்யம் (தலைவனாய் இருக்கும் தனித்தன்மை)

 4-1

வீர்யம், சக்தி, தேஜஸ் ஆகிய உயர்குணங்களின் தொகுப்பாய்த் தோற்றுபவன் நாராயணன்.

4. வைகுண்டநாதனாய், பரவாஸுதேவனாய், எப்பொழுதும் வீற்றிருக்கும் உயர்நிலையாம், மேல்வானமான நித்ய விபூதி; உலகில் வாழ்மக்களின் துயர ஒலி கேட்டு விரைந்து அருள் புரிவான் நோக்கொடு வ்யூஹம், விபவம் இவைகளோடு தோற்றும் அலகிலா விளையாட்டுடை லீலா விபூதி இரண்டையும் உடையவன் நாராயணன்.

5. எல்லாவற்றிற்கும் உள்ளுறை உயர் ஆற்றல் நாராயணன்.

6. பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி இவற்றினொடு திவ்ய தேசங்களில் அர்ச்சையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானும் நாராயணனே.

7. எல்லாவற்றிற்கும் மேலாக வேதம் ஓதிடும் வேதியர் இல்லம் தோறும் பூசனைக்குரிய ஸாலக்ராம மூர்த்தியும் நாராயணனே.

8. எல்லா நிலையிலும் அகலகில்லேன் இறையுமென பிராட்டியான லக்ஷ்மியுடன் கூடியவனான லட்சுமி நாராயணன் அவனே.

9. நல்லறிவு படைத்த சான்றோர்கள் அன்றும் இன்றும் என்றும் புகலிடமாகக் காணுகின்ற அடைக்கலந்தரும் இறை நாராயணனே.

10. அப்படி, "உனதடிகள் அடைகின்றேன் என்று ஒரு கால் உரைத்தவரை" என்ற ஸ்வாமி தேசிகன் கூற்றுப்படி அடைக்கலம் புகுந்தவர்களை வாத்ஸல்யம் (ஈன்ற கன்றின்பால் பசுகாட்டும் அற்புத அன்பு) காட்டிக் காப்பாற்றுபவன் நாராயணனே.

11. எல்லா நிலைகளிலும் யாராலும் எக்காலத்தும் எவ்விடத்தும் புரிந்துக் கொள்ள முடியாத ஆச்சரியமான விளையாடல்களை உடையவன் நாராயணனே.

எனவே தான் ஆண்டாள் முதல் பாசுரத்தில் நோன்பாய், நோற்பவராய், நோன்பின் உபகரணமாய், நோன்பின் பயனாய் இருப்பவன் நாராயணனே என்று அறுதியிட்டு மிக்க இறை நிலையைக் கூறினள் போலும்.

அடுத்த "நமக்கே" என்ற அருஞ்சொல்லால் ஜீவனான

நம்முடைய தன்மைகளையும் சொல்லுவாள் புகுந்து, ஜீவனைப் பற்றிய செய்திகளையும் நினைவு கூறுவாளாயினாள்.

இந்த ஜீவன் யார் என்பதை விஷ்ணுபுராணம் :

புமான் ந தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப:
ஸரீராக்ருதி பேதாஸ்து பூபைதே கர்ம யோனய:

"அரசே இந்த ஜீவன் தேவனல்லன்; மனிதன் அல்லன்; மிருகமல்லன்; தாவரமல்லன்; சரீரங்களின் அமைப்பினால் ஏற்பட்ட இவ்வேற்றுமைகள் கர்மத்தால் வந்த சரீரங்களைப் பற்றினவையேயாகும்" என்ற கூற்றுப்படி இந்த ஜீவன் எம்பெருமான் ஒருவனுக்கே அடிமையாயுள்ளவன் என்பதை உணர்ந்தவள் ஆண்டாள். எல்லா இடத்திலும், எல்லாக்காலத்திலும் எல்லாநிலையிலும் இந்த ஜீவன் ஆதாரமாகக் கொண்டது நாரணன் ஒருவனையே. "நாரணன்பரன் நாம் அவனுக்கு நிலையடியோம்' என்ற சொற்றொடரும் இதனையே வலியுறுத்தும். இந்த ஜீவன்:

1. சரீரம், புலன்கள் இவைகளால் அமைந்த தோற்றத்தில் தெரிபவன். 2. ஞானம், ஆனந்தம் இவைகளின் வடிவாய் அமைந்தவன். 3. ஞானம், ஆனந்தம் இவைகளின் நிலைக்களமாய் இருப்பவன். 4. 'தானே' நானென்று தோன்றுபவன். 5.தன் பயனுக்காகவே பிரகாசிப்பவன். 6. மிக நுண்ணியன். 7. எம்பெருமானுக்கு அடிமையாய் இருத்தலிலேயே இன்பம் கண்டவன். 8. தன் ஸ்வரூபம், நீடித்தல் எல்லாவற்றையும் எம்பெருமானுக்கு வசப்பட்டவனாகக் கொண்டவன். 9. இறையனுபவம் பெற முழுத்தகுதியுள்ளவன். 10. தன் ஸ்வரூபத்திற்கேற்றபடி இஷ்டப்படி கைங்கர்யம் பண்ண விரும்புவன்.

இவற்றையெல்லாம் உள்ளடக்கியே "நமக்கே" என்ற சொன்ன ஆண்டாள் திருவுள்ளம் வேதஸாரமான செய்திகளை யெல்லாம் இரண்டு அடிகளாலும், ஏன் இரண்டு சொற்களாலும் விளக்குவதே என்று தெளிகிறோம். இத்தெளிவின் நிலையால் திருப்பாவையின் உள்ளுறை ஆழ் பொருள் அறிவோம். புது அனுபவம் பெறுவோம். இவை யனைத்திற்கும் காரணனாம் நாரணனைப் பாரோர் புகழப் படிந்து ஏத்துவோம்.

ஆண்டாளின் திருப்பாவை

ஒரு புதிய கண்ணோட்டம்

ஸ்ரீ.உ.வே.வீராபுரம் சம்பத் தீக்ஷிதர், காஞ்சிபுரம்.

வேயர் புகழ் வில்லிபுத்தூர் மிகவிளங்க பெரியாழ்வார் திருமகளாய் பொறை சேரும் பூமகளின் திருவவதாரமாம் என வியக்க அவதரித்தவள் கோதை. பாமாலை, பூமாலை இரண்டையும் எம்பெருமானுக்குச் சாற்றி அவனையே, காதலால் ஆண்டாள். பக்திக்கும், பரம் பொருளின் பணிக்குமே நாம் ஆளாகச் செய்து நம்மை கருணையால் ஆண்டாள். முன்னோர் போற்றிய முறைகளைப் பற்றி, பின்னோர் பற்றிட முறைகளைத் தந்து முத்தமிழ்ப் பாசுரங்களால் மண்ணையுங் காத்து ஆண்டாள். அக்கோதிலா கோதையின் திருப்பாவைக்கு எத்தனையோ அருளாளர்கள் அற்புத உரையருளிப் போந்துள்ளனர். அவர்தம் வழியினின்றும் மாறுபடாது, அதே சமயம் ஒரு புதிய கண்ணோட்டத்துடன் திருப்பாவையின் சிந்தனையைக் காண வேண்டும் எனும் வேட்கையின் விளைவு இது. இச்சிந்தனையை சிந்தனைக்கும் எட்டாத சீரிய சிங்காதனத்தான் தூண்டினான். சொல்லின் தொடர்ச்சியாய், சொல்லப்படும் பொருளுமாய், சொல்லினால் சொலப்படாத சோதியாய்த் தோன்றும் அவ்வாலறிவன் வள்ளண்மை காட்டிய வார்த்தை அழகிது.

ஆண்டாள் அவனிக்குக் காட்டிய பரம்பொருள் ஒன்று

ஆண்டாள் தன் திருப்பாவையின் மூலம் காட்டிய பரம் பொருள் நாராயணனே. "யாரிடமிருந்து இவ்வுலகின்கண் உள்ள அசையும் பொருள்கள் அசையாப் பொருள்கள் எல்லாம் உண்டாயிற்றோ, எந்த பரம் பொருளின் பேரருளினால் பெரிதாம் உலகின் கண் தோன்றிய உயிரினங்கள் வாழ்கின்றனவோ, பிரளயம் வந்துறுங்காலை இவையனைத்தும் எவனிடத்து ஒடுங்குகின்றனவோ, அந்த பரம் பொருள் நாராயணனே என்பது ஆண்டாளின் துணிபு. அப்பினுள் அமுதமாய், அனைத்து மக்களின் நெஞ்சிலுறைபவனாய் இருப்பவனான நாராயணன் தான் கண்ணன் என்பதை " கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரனாய், யசோதை இளஞ்சிங்கமாய், கார்மேனியனாய், செம்மைபொருந்திய கண்களை உடையவனாய், கதிரையும், நிலவையும் ஒத்த திருமுகத்தனனும், நமக்குப் பறை தருவான் அமைந்தவன் நாராயணனான கண்ணனே" என்று அறுதியிட்டு "ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீராப்தி நிகேதந: நாகபர்யங்கம் உத்ச்ருஜ்ய ஆகதோ மதுராம் புரீம்" என்ற பாகவத சுலோகத்திற்கு விளக்கம் கூறினாள்.

ஆண்டாள் இறைவனிடம் விண்ணப்பம் செய்த செய்திகள் இரண்டு

தன் உடனுறை தோழிகளை எழுப்பியவளாய் ஆண்டாள், நந்தகோபன் திருமாளிகையாய் பாவித்த வடபெருங்கோயிலுடையானைச் சேவித்து விண்ணப்பித்த செய்திகள் "இறைவா இற்றைப்பறைகொள்வான் வேண்டியவை இரண்டே, ஒன்று நாங்கள் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் உனக்கு வேண்டியவர்களாய் உன்றன்னோடு உற்றவர்களாய் இருக்க வேண்டும். மற்றொன்று இம்மண்ணுலகில் உன் ஒருவனுக்கே தொண்டுபுரிபவர்களாக இருக்க வேண்டும்." "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமே யாவோம் உமக்கே நாம் ஆட்செய்வோம் மற்றை நம் காமங்கள் மாற்று". இவ்வரிகளன்றோ சாற்றுமுறை.

ஆண்டாள் பெரிதும் போற்றிய அவதாரங்கள் மூன்று

ஆண்டாள் திருப்பாவையில் பெரிதும் போற்றிய அவதாரங்கள் 1. வாமனனாய் வந்து திரிவிக்கிரமனாய் மாறியது. 2. மனத்துக்கினியானான இராமனாய் அவதரித்தது. 3.பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் கண்ணனாய் அவதரித்தது. ஒரு செய்தியை மூன்று முறை கூறினால் அது உறுதிப் பொருள். மேற்கூறிய மூன்று அவதாரங்களையும் ஆண்டாள் மூன்றுமுறை போற்றியுள்ளாள்.

"ஓங்கியுலகளந்த உத்தமன் பேர்பாடி" என்றும், "அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த" என்றும் "அன்றிவ்வுலகமளந்தாய் அடி போற்றி" என்றும் வாமனனாய் வந்து திரிவிக்ரமனாய் மாறிய அவதாரச் செய்தியைக் குறிப்பிடுகிறாள்.

ஸ்ரீ இராமாவதாரத்தை "மனத்துக்கினயானைப் பாடவும் நீ வாய் திறவாய்" என்றும், "பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை கீர்த்திமை பாடிப்போய்" என்றும் "சென்றங்குத் தென்னிலங்கைச் செற்றாய் திறன் போற்றி" என்றும் போற்றியிருக்கிறாள்.

ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தை ஒரே பாசுரத்தில் "பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி" என்றும் "கன்று குணிலாய் எறிந்தாய்" என்றும் "குன்று குடையாய் எடுத்தாய்" என்றும் போற்றியுள்ளதை அனைவரும் அறிவோம்.

விபவத்தை மட்டுமல்லாது மற்றைய நிலைகளான பரம், வ்யூஹம், அந்தர்யாமி, அர்ச்சை இவைகளையும் நாம் ஆண்டாள் திருப்பாவையில் காணலாம்.

முதல் பாசுரத்தில் வேத ப்ரதிபாத்யமானவனும், நம்மால் அடையப்பட வேண்டியவனும், அப்படி அவனை அடைய உபாயமானவனும், அவனே என்று "நாராயணனே நமக்கே பறை தருவான்" எனும் சொற்றொடரினாலே விளக்கியுள்ளமை நாமறிவோம். இது பரத்தை நிர்ணயம் செய்வது.

இரண்டாவது பாசுரத்தில் பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடிபாடி

என்பதன் மூலம் நித்யவிபூதியினின்றும், ஆச்ரிதர்களின் ஆர்த்த த்வனி தன் திருச்செவியில் பட வேண்டும், அதற்கு நாம் உடனே பரிகாரமாக உதவ வேண்டும் என்று திருவுளம் கொண்டு வ்யூஹத்தில் எழுந்தருளியுள்ள பாங்கினை நிர்ணயம் செய்கிறாள்.

அந்தர்யாமியைப் பற்றி தோற்றமாய் நின்ற சுடரே என்பதன் மூலம் அசையும் பொருள்கள், அசையாப் பொருள்கள் எல்லாவற்றிலும் அகமும் புறமுமாய் காணப்படுபவன் என்று நிர்ணயம் செய்கிறாள்.

அர்ச்சையைப் பொறுத்தவரையில் ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபத்ரசாயிப் பெருமாளின் திருக்கோயிலையே நந்தன் மாளிகையாகப் பாவித்து நாயகனாய் நின்ற நந்த கோபனுடைய கோயில் என்று பாடி வட பெருங்கோயிலுடையானையே கண்ணனாய் அறுதியிடும் பாங்கினால் அறியலாம்.

இப்படி இறைமையைப் பற்றியும், இறையடியார்கள் வாழ்வு இலக்கு பற்றியும் பாடியதோடு நில்லாமல் மக்களின் வளமான, நிறைவான குறைவில்லாத, அடியார் கூட்டத்தோடு சேர்ந்து வாழும் நலமார் வாழ்வையும் காட்டுகின்றாள்.

வளமான வாழ்வைப் பறை சாற்றும் வரிகள்.

தூமணிமாடம், உங்கள்புறக்கடைத் தோட்டத்து வாவி, கீழ்வானம் வெள்ளென்று - இப்பாசுரங்கள் மூலம் ஆயர்பாடியாக பாவித்த ஸ்ரீவில்லிபுத்தூர் தூமணிமாடங்கள் கொண்டதாய், ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள் நீராட வாவி உடையதாய், எருமைமாடுகள் கூட காலார நடந்து பனிப்புல் மேய புல்வெளி கொண்டதாய் விளங்க வேண்டும் என்ற எதிர் பார்ப்பை இறந்தகாலச் செய்தியாய் ஆயர்பாடி பெற்றிருந்தது என்று குறிப்பிடும் பாங்கு வியக்கத்தக்கதே அன்றோ.

நிறைவான செல்வச் சிறப்போடு வாழும் பாங்கை பறைசாற்றும் வரிகள்

"சீர்மல்கும் ஆய்ப்பாடி செல்வச்சிறுமீர்கள்," காசும், பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து, சூடகமே, தோல்வளையே, தோடே செவிப்பூவே என்ற வரிகள் மூலம் ஒரு நாட்டின், ஒரு ஊரின், ஒரு பாடியின் நிறைவான செல்வச் சிறப்பைப் பெண்டிர் அணியும் அணிகலன்களால் அறியலாம் என்பதை விளக்கி ஆயர்பாடியினது நிறைவான செல்வங்கொழிக்கும் நிலையால் சான்று கூறுகிறாள். குறைவில்லா வாழ்வு-அதாவது இறைவன் இன்னருள் பெறல், மனதில் தோன்றும் இதர காமங்கள் மாற்றுதல், நாடும் மக்களும் புகழ எங்கும் திருவருள்பெறல்.

இவ்வாறு இறையருளோடு, மயர்வறும் மதிநலம் பெற்று வாழ வேண்டும் என்பதை சாற்றுமுறைப் பாசுரங்களின் வரிகளால் ப்ரார்த்திக்கிறாள்.

இவையெல்லாவற்றிலும் ஓர் அற்புதம். பின்னர் ஒரு காலத்தில் திருக்கச்சி நம்பிகள் மூலம் பேரருளாளன் ஆறு வார்த்தைகளை அருள வேண்டும் என்பதை முன்கூட்டியறிவிப்பது போன்ற திருப்பாவைப் பாசுரங்கள்

நம்மை ஒரு கணம் திகைக்க வைக்கின்றன.

நாராயணனே நமக்குப் பரன் என்பதையே அவன் வாய்ச் சொற்களால் அஹமேவபரம்தத்வம் என்று சொல்ல வைப்பது போன்ற - 'நாராயணனே நமக்கே பறைதருவான்' என்ற சொற்றொடரால் தெளிவுபடுத்தியுள்ளாள்.

ஜீவாத்ம, பரமாத்ம பேதம் - என்பதை ஜீவன் நித்யன் ஆனாலும் நம்மால் போற்றப் பறை தரும் புண்ணியன் பரமாத்மாவே என்றும் 'குற்றேவல் கொள்ளாமற் போகாது' என்பதால் பகவானுக்கு கைங்கர்யம் பண்ணும் நிலையில் பகவான் (அவன்) சேஷி, ஜீவன் (இவன்) சேஷன் என்று தெளிவு படுத்தியுள்ளாள்.

இறைவனை 'அடைக்கலம் புகுதல் - ஒன்றே உபாயம்' என்பதை "வந்துதலைப் பெய்தோம்" என்ற வரிகள் மூலமும் அன்றிவ்வுலகம் அளந்தாய் மூலம் அடிபோற்றி உய்வது தான் சிறந்த வழி என்பதையும் தெளிவு படுத்தியுள்ளாள்.


அந்திம ஸ்ம்ருதி தேவையில்லை - என்பதை "சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்து" பாசுரம் மூலம் இளம் வயதிலேயே உன்னை ஸேவித்து இருக்கிறோம். வராஹ சரம சுலோக வார்த்தைகளாம். "ஸ்திதே மனஸி ஸுகஸ்தே ஸரீரே, தாது ஸாம்யே" என்பதற்கேற்ப வந்திருக்கிறோம். அந்திம தசையில் நாங்கள் நினைக்க முடியாத போது இளமையில் பணிந்ததைக் கொண்டே நீ நினைப்பாய் என்பதை 'அஹம் ஸ்மராமி மத்பக்தம்' என்ற அடிப்படையில் உறுதிபடுத்துவான் வந்தோம் என்று தெளிவு படுத்துகிறாள்.

நல்லாசானை ஆச்ரயித்தல் - என்பதை "பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத் தமிழ்மாலை" என்பதன் மூலம் தனக்கு ஆசார்யனான பெரியாழ்வாரை முன்னிட்டே பாடியுள்ள தன்மை மூலம் காட்டியுள்ளாள்.

ஆத்ம நிவேதனம் (ஸமர்ப்பணம்) 'ஆழி மழைக் கண்ணா' பாசுரத்தின் மூலம் பர்ஜன்யனுக்குச் சொல்லுமாம் போல 'நீ அந்த கருணைக் கடலுக்குள் புகுந்துவிடு, உன்னை அவனிடம் ஒப்படைத்த உடனே ஆழிபோல் மின்ன, வலம்புரி போல் நின்றதிர உனக்குப் பேராற்றல் தந்து விடுவான். பொறுப்பை அவனிடம் ஒப்படைத்து விட்டு ஆத்ம ரக்ஷா பரம் அவனுடையது என்று இருந்து விட்டால் போதும் எல்லா வளங்களும் நமக்கும், நம்மால் நாட்டிற்கும் பெருகும்' என்று தெளிவு படுத்தியுள்ளள்.

இவைகளையெல்லாம் எண்ணி தானோ என்னவோ வேறு எந்த திருக்கோயிலிலும் இல்லாத ஓர் வழி முறை தேவாதிராஜன் ஸந்நிதியில் மலையிலிருந்து உற்சவம் கண்டருள எழுந்தருளும் தேவாதிராஜன் மீண்டும் மலைக்கெழுந்தருளுங் காலை தன் மாலையை ஆண்டாளுக்கு ஸமர்ப்பித்து, பின்னர் அவள் சூடிக் கொடுத்த மாலையோடு எழுந்தருளுகிறான் போலும். என்னே பாடியும் சூடியும் கொடுத்த பாவையவள் பாக்கியம்.

-சுபம்-



DTP by : Madras STUDENTS' XEROX Cell : 94431 19914